21.04.2023 SC.102/17

சாட்சி : PW. 6 பெயர்: சுப்பையா

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: நான் சம்பவ இடத்திற்கு 7.45 - 8 மணிக்குள் சென்றுவிட்டேன். சம்பவம் சம்பந்தமாக எனக்கு சண்முகவேல் என்பவர் தகவல் சொன்னதன் அடிப்படையில் சென்றேன். சண்முகவேல் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு என்னை வரவழைத்தார். அவர் எந்த தொலைபேசி நம்பரில் இருந்து அழைத்தார் என்று ஞாபகம் இல்லை. எனது கைபேசி நம்பருக்கு தான் அழைத்தார். நம்பர் ஞாபகம் இல்லை. அவர் போனில் அழைக்கும் போது நான் தேவகோட்டையில் உள்ள எனது வீட்டில் இருந்தேன். சம்பவ இடத்திற்கு நான் போகும்போது சம்பவ இடத்தில் 6 பேர் இருந்தார்கள். சண்முகவேல், தங்கவேல், பழனிவேல், வேலுச்சாமி, கோபால் மற்றும் சுந்தரம் ஆகியோர்கள் இருந்தார்கள். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் அதற்கான காரணம் சண்முகவேல் சொல்லித்தான் தெரியும். சம்பவ இடத்திலிருந்து நான் கோபாலன், சுந்தரம் ஆகியோர் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் சென்றோம். ஆட்டோவை சம்பவ இடத்திற்கு யார் அழைத்தார்கள் என்று தெரியாது. ஆட்டோவின் பதிவு எண் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு ஒருவருடத்திற்கு ஆஜா் எதிரி சுப்பிரமணியனுக்கும் எனக்கும் இடையே ஒரு குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்தவித சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.